DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, MADURAI.

SESSIONS CASE No. 262/2022

Prosecution Witness PW 1

.....

| | |
|---|---|
| Name : திரு. தங்கராஜ். | Caste : |
| Father's name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**நாள் -13.02.2025**

**1-ம் எதிரி - பிரபாகரன். 2-ம் எதிரி - பாலமுருகன், 3-ம் எதிரி - மணிமாறன், 4-ம் எதிரி நெல்சன், 5-ம் எதிரி - சபாரத்தினம் , 6-ம் எதிரி -பாண்டிவிஜய், 7-ம் எதிரி மணிகண்டன், 8-ம் எதிரி - விக்னேஷ்குமார், 9-ம் எதிரி -விவேக், 10-ம் எதிரி காளிதாஸ்.**

(A1, A2 and A5 are under custody in P.T Warrant)

(A3, A4 and A6 to A10 Accused are present)

**முதல்விசாரணை-**

நான் தற்போது மதுரை புதூரில் குடியிருந்து ஆட்டோ ஓட்டி வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். இவ்வழக்கில் இறந்துபோன பால்பாண்டி என் அப்பா ஆவார். கடந்த 03.05.2019 அன்று என் அப்பா பால் பாண்டி இறந்தார். என் அப்பாவை சாப்பிட அழைத்துவரச் சொல்லி என் அம்மா சொன்னதன்பேரில் நான் போய் சாப்பிட என் அப்பாவை அழைத்தபோது அவர் மதுரை, புதுமகாளிப்பட்டி கார்ப்பரேசன் அருகில் உட்கார்ந்திருந்தார். என் அப்பா காம்ப்ளக்ஸில் உள்ள துணிக்கடையில்தான் உட்கார்ந்திருப்பார். .....

நான் தனபால் என்பவரிடம் என் அப்பா எங்குள்ளார் என கேட்டேன். எனது அப்பா இரண்டு டு வீலரில் வந்த நபர்கள் (Suzzuki swish,Yamaha Fzs ) என்ற வண்டியிலும் வந்த நெல்சன் மற்றும் புல்லட் மணி ஆகியோர் எனது அப்பாவை Yamaha Fzs என்ற வண்டியில் நெல்சன் (5 வது நபராக உள்ளவர்) என்பவர் வண்டியை ஓட்டிச் வந்தார். புல்லட் மணி ( 4 வதாக உள்ள நபர்) பின்னால் உட்கார்ந்து வந்தார். suzuki swish என்ற வண்டியில் மச்சபாலா என்பவர் (2 வதாக நிற்பவர்) வண்டியை ஓட்ட (1 வதாக நிற்பவர் பின்னால் உட்கார்ந்து வந்தார்கள். என் அப்பாவை அவர்கள் மாநகராட்சி காம்ப்ளக்ஸ் அருகில் வைத்து அரிவாள், சுருள் கத்தி, வாள், பட்டா கத்தி ஆகியவற்றால் என் அப்பாவை வெட்டிவிட்டு தப்பி ஓடிச் சென்றுவிட்டார்கள். சம்பவம் நடக்கும்போது தனபால், துணிக்கடை வைத்திருப்பவரான ஸ்டீபன் ஆகியோர் இருந்தனர். பின்னர், நாங்கள் என் அப்பாவை ஆம்புலன்ஸ் மூலம் மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தோம். பின்பு, மதுரை, தெற்கு வாசல் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கச் சென்றோம். இரண்டு மாதங்களுக்கு முன்பு என் அப்பா பார் வைத்து நடத்தி வந்தார். எதிரிகள் பாண்டிச்சேரியில் உள்ள சரக்கு மற்றும் கஞ்சா ஆகியவற்றை ..

விற்பனை செய்வதால் என் அப்பாதான் போட்டுக் கொடுத்திருப்பார் என்று என் அப்பாவிற்கும், 5 ம் எதிரியான சபாரத்தினம் என்பவர் சொல்லிதான் என் அப்பாவை வெட்டி விட்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் தான் நான் காவல்நிலையத்தில் கொடுத்ததாகும். அது அ.த.சா.ஆ.1 ஆகும். எதிரிகள் சம்பவத்தின்போது பயன்படுத்திய கத்தி , அரிவாள், வாள் ஆகியவை சா.பொ. 1 முதல் 3 ஆகும். ( எதிரிகள் தரப்பில் மேற்படி சான்று பொருட்களை எந்த எதிரிகள் குறிப்பாக எந்த ஆயுதத்தால் என் தகப்பானரை வெட்டினார்கள் என்பதை குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்பதால் எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டுள்ளது) எதிரிகள் சம்பவத்தின்போது பயன்படுத்திய இருசக்கர வாகனத்தின் வாகன எண்ணானது TN 59 BB 8427 என்ற Suzzuki swish என்ற வாகன;த்தின் புகைப்படம் சா.பொ. 4 ஆகும். TN 64 P 8120 Yamaha Fzs என்ற வாகனமானது நெல்சன் என்பவர் ஓட்டி வந்த வண்டி ஆகும். மேற்படி இருசக்கர வாகனத்தின் புகைப்படம் சா.பொ. 5 ஆகும். (சா.பொ. 4 மற்றும் 5 ஆகிய ஆவணங்களை பொறுத்து புகாரிலும், முதல் தகவல் அறிக்கையிலும் குறிப்பிடப்படவில்லை என்பதால் .....

எதிரிகள் தரப்பு வழக்குரைஞரின் ஆட்சேபணையின்பேரில் குறியீடு செய்யப்பட்டது.)

எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையானது சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் இந்த நீதிமன்றத்திற்கு வரவில்லை என்பதால் அனைத்து சாட்சிகளையும் முதல் விசாரணை முடிவடைந்த பின்பு குறுக்குவிசாரணை செய்வதாக கூறியதன்பேரில், குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம் **-** தங்கராஜ்**.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/- N. Nagalakshmi.
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி (மு.கூ.பொ),
மதுரை.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, MADURAI.

SESSIONS CASE No. 262/2022

Prosecution Witness PW 2

.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. அந்தோணி ஸ்டீபன் | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**நாள் -13.02.2025**

1-ம் எதிரி - பிரபாகரன். 2-ம் எதிரி - பாலமுருகன், 3-ம் எதிரி - மணிமாறன், 4-ம் எதிரி நெல்சன், 5-ம் எதிரி - சபாரத்தினம் , 6-ம் எதிரி -பாண்டிவிஜய், 7-ம் எதிரி மணிகண்டன், 8-ம் எதிரி - விக்னேஷ்குமார், 9-ம் எதிரி -விவேக், 10-ம் எதிரி காளிதாஸ்.

(A1, A2 and A5 are under custody in P.T Warrant)

(A3, A4 and A6 to A10 Accused are present)

நான் தற்போது மதுரையில் உள்ள தமிழன் தெருவில் குடியிருந்து புதுமகாளிப்பட்டி ரோட்டில் பாத்திரக் கடைவைத்து நடத்தி வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன பால்பாண்டி என்பவரை தெரியாது. அவரின் நண்பரான தனபாலை எனக்கு தெரியும். பால்பாண்டி என்பவர் தனபால் என்பவரின் நண்பர். அவரைப் பார்ப்பதற்காக தினசரி பால்பாண்டி அவரின் கடைக்கு வருவார். சுமார் 7 வருடங்களுக்கு முன்பாக மதியம் சுமார் 01.00 மணியளவில் தனபால் கடையில் இருந்து வந்து எனது கடை .....

வாசலில் வந்து நின்று கொண்டிருந்தார். தனபால், பால்பாண்டி, சுந்தர்ராஜன் ஆகியோர் நின்று கொண்டிருந்தனர். நான் கடையின் உள்ளே உட்கார்ந்து வியாபாரம் பார்த்துக் கொண்டிருந்தேன். பால்பாண்டி திடீரென மேலே ஏறி கடைக்குள் வந்தார். நான் திரும்பி பார்க்கும்போது 4, 5 நபர்கள் அவரை சுற்றி வளைத்து நின்றார்கள். அவர்கள் கத்தி, அரிவாள் போன்ற ஆயுதங்களை வைத்திருந்தார்கள். நான் அதைப் பார்த்துவிட்டு கடையில் இருந்து ஓடி விட்டேன். நான் போய் விட்டு 5 நிமிடம் கழித்து வந்து பார்த்தபோது பால்பாண்டி இரத்த வெள்ளத்தில் என் கடை வாசலின் கேட் அருகே விழுந்து கிடந்தார். அந்த இடத்தில் வேறு யாரும் இல்லை. பால்பாண்டி என்பவரை சுற்றி வளைத்த நபர்கள் தற்போது நீதிமன்றத்தில் உள்ளனரா என்று பார்த்து கூறும்படி சாட்சியிடம் கூறியபோது, தற்போது சாட்சி ஆள் தெரியவில்லை என்றும், நான் சம்பவ இடத்தில் இருந்து ஓடி விட்டதாகவும் கூறினார். இறந்துபோன பால்பாண்டி என்பவரை நான் மீண்டும் வந்து பார்க்கும்போது அவருக்கு கழுத்தில் வெட்டுக் காயம் இருந்தது. 4, 5 நபர்கள் சம்பவ இடத்திற்கு எவ்வாறு வந்தார்கள் என்று எனக்குத் தெரியாது. அவர்கள் பயன்படுத்திய ஆயுதங்களை என்னால் ....

குறிப்பிட்டுக் கூற முடியாது. அ.சா.1 தங்கராஜ் சம்பவ சமயத்தில் அங்கிருந்தாரா என்று என்னால் சொல்லமுடியாது. போலீஸ் விசாரணையின்போது இறந்த பால்பாண்டி எவ்வாறு இறந்தார் என்ற விபரத்தை கேட்டார்கள். 4, 5 நபர்கள் மேலே ஏறி வந்ததை பார்த்தவுடன் நான் ஓடிவிட்டேன் என்ற விபரத்தினை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் முதல் விசாரணையில் கூறியுள்ளதை தான் போலீஸ் விசாரணையிலும் கூறியுள்ளேன்.

சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி வழங்கப்படுகிறது.

அரசுத் தரப்பில் குறுக்குவிசாரணை -

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 03.05.2019 அன்று மதியம் 01.45 மணியளவில் கடையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது இறந்துபோன பால்பாண்டி , தனபால் மற்றும் சுந்தர்ராஜ் ஆகியோர் கடைக்கு முன்பாக பேசிக் கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது ஆஜர் எதிரிகளான 1 முதல் 4 எதிரிகள் TN 59 BB 8627 Suzzuki swish என்ற வாகனத்தில் 4 எதிரிகள் வந்தார்கள் என்றும், TN 64 P 8120 Yamaha Fzs என்ற இரு வாகனங்களிலும் 4 எதிரிகளும் வந்தனர் என்றும், அதில் அடையாளம் தெரியாத நபர் மற்ற 3 எதிரிகளையும் பார்த்து பால்பாண்டியை வெட்டி ….

கொல்லுங்கடா என்று சொன்னவுடன் அந்த 3 பேரும் உள்ளே நுழைந்து மாறி மாறி வெட்டியதில் பால்பாண்டி நிலைகுலைந்து சம்பவ இடத்திலேயே உயிருக்கு போராடியபோது அங்கு வந்த பால்பாண்டி மகன் தங்கராஜ் என்பவர் அடையாளம் தெரியாது நபர்களை பார்த்து என்னங்கடா பண்றீங்க என கேட்டு ஓடி வந்தபோது அடையளாம் தெரியாத மூவரும் கையில் இருந்த ஆயுதங்களுடன் தங்கராசை பார்த்து ஒழுங்கா ஓடிவிடுடா இல்லை என்றால் உன் அப்பனை போட்டதுபோல் உன்னையும் போட்டு விடுவோம் என மிரட்டி சென்றார்கள் என்றும், அதில் ஒரு எதிரியான சைனா பிரபாகரன் என்பவர் கையில் வைத்திருந்த பட்டா கத்தியை அங்கேயே தூக்கியெறிந்துவிட்டு அங்கே நின்றிருந்த மோட்டார் சைக்கிளில் ராமசாமி சந்து வழியாக சென்றுவிட்டனர் என்றும், மேற்படி சம்பவத்தை நான் சுந்தர்ராஜ், தனபால் ஆகியோர் அங்கிருந்து ஓடிச் சென்று பார்த்தபோது பால்பாண்டியின் தலை, முகம் , கைகள், இடது கால் தொடை ஆகிய இடங்களில் வெட்டு காயம் ஏற்பட்டு துடிதுடித்து இறந்துகிடந்தார் என்றும் இது சம்பந்தமாக பால்பாண்டியின் மகன் தங்கராஜ் தெற்கு வாசல் காவல்நிலையத்தில் புகார் கொடுக்க சென்றார் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு ….

தற்போது எதிரிகளுக்கு பயந்து சம்பவம் குறித்து தெரியாதென பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

ஒப்பம் - அந்தோணி ஸ்டீபன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/- N. Nagalakshmi.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி (மு.கூ.பொ),
மதுரை.